1961 ஏப்ரல் 7]

2. தகவல் கோரல்

அ. மதுவிலக்கு சட்ட முன்வடிவு குறித்து சில பத்திரிகைகளில் வந்த செய்தி.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, ஒரு முக்கியமான விவரத்தை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களுடைய கவனத்திற்கும், அரசினுடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். நேற்றைய தினம் மது விலக்கு பிரச்சினை பற்றிய, மதுவிலக்கு சம்பந்தப்பட்ட ஒரு சட்ட முன்வடிவு அமைச்சரவர்களால் இந்த மாமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. அதில் மது விற்பதற்கான உரிமம் லைசென்ஸ் முறையிலேயா அல்லது ஏலத்திலேயா என்ற விவரங்கள் இல்லாமல் இருந்தாலும், நேற்று மாலை சில பத்திரிகைகளிலேயும், இன்று காலையில் சில பத்திரிகைகளிலேயும் லைசென்ஸ் முறைதான், ஏலம் விடுவது இல்லை என்ற முறையில் செய்தியாக வெளியிடப்பட்டிருக்கிறது. சட்டமுன் வடிவில் இல்லாத அந்த விவரத்தை, விவரம் இல்லாத சூழ்நிலை இருக்கும் பொழுது, அதைப் பற்றிய விவரத்தை, சட்டமுன் வடிவில் சொல்லாததைப் பத்திரிகைகள் செய்திகளாக வெளியிட்டிருக்கின்றன. இதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதைப் பற்றிய விவரங்களை அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, பத்திரிகையிலே வந்தது முற்றிலும் உண்மைக்கு மாறானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமுன்வடிவில் ஏலத்திலா இல்லையா என்று சொல்லப் படாமல் இருக்கும் பொழுது சட்டமுன்வடிவில் இல்லாததை உண்மைக்கு மாறாகச் செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சம்பந்தப்பட்ட சட்டமுன்வடிவு 10 ஆம் தேதி வருகிறது. அன்றைக்கு விளக்கமாகச் சொல்லிக் கொள்ளலாமே.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, எடுத்து வைக்கப்பட்ட பிரச்னைக்கு அமைச்சரவர்கள் இன்றைக்கு விளக்கம் சொன்னார்கள். ஆனால் கொடுக்கப் பட்டிருக்கின்ற மசோதாவைப் பத்திரிகைகள் வெளியிடக்கூடிய வாய்ப்பு இருக்குமேயானால் கருத்துக்களை அவர்கள் உணரும் வகையில் விளக்கமாக வெளியிட்டிருப்பார்கள். அந்த விளக்கங்களை எல்லாம், நேற்றைய தினம் அந்தச் சட்டமுன் வடிவை எதிர்த்துப் பல பேர் பேசிய நேரத்தில் அமைச்சரவர்கள் சொல்லி இருப்பார்களேயானால் அந்தக் கருத்துக்களை வெளியிடுகின்ற

வாய்ப்பு அந்தப் பத்திரிகைகளுக்குக் கிடைத்திருக்கும். ஆனால் இப்பொழுது, அந்தப் பத்திரிகைகள் வெளியிட்ட கருத்து உண்மைக்கு மாறானது என்றும், அரசாங்கம் சொல்லாத கருத்தைத் திரித்து வெளியிட்டு விட்டன என்றும் சொல்வதில் அரசாங்கத்தின் பக்கம் அவ்வளவு நியாயம் இருப்பதாகத் தோன்றவில்லை. காரணம், இன்பரன்ஸ் என்ற முறையில் அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்களே தவிர, அமைச்சர் ஒரு கருத்தைச் சொல்லி, அதற்கு மாறான கருத்துக்களை வேண்டுமென்றே அந்தப் பத்திரிகைகள் வெளியிட்டு விட்டதாகத் தோன்றவில்லை. நான் மசோதாவைப் படித்துப் பார்த்த அளவில் வேண்டுமென்று திரித்துப் போடப்பட்ட செய்தியாக அவைகள் தோன்றவில்லை. ஒரு வேளை அது, அரசாங்கம் விளக்காத காரணத்தினால் ஏற்பட்ட குறையாக இருக்கலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்பரன்ஸ் என்று சொல்லி விட்டு எதையும் போட்டுவிடலாம் ; இன்பரன்ஸ் என்று எதற்கும் சொல்லலாம் : அதற்கு ஒரு வழிமுறை, கட்டுப்பாடு என்பது இல்லை. இது முக்கியமான பிரச்னை. சட்டத்திலே ஏலமா, லைசென்ஸா என்பது மிகவும் முக்கியமான பிரச்னை. அதைச் சொல்லாமல் இருக்கும்பொழுது வேண்டுமென்றால் அதைக் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அது மட்டுமல்ல சட்டப் பேரவையில் நான் சொல்லாததை வெளியிலே கேட்டாலும் சொல்லக் கூடாது என்பது விதிமுறை என்பது நமக்குத் தெரியும். சட்டம் பற்றிய விவாதம் பத்தாம் தேதி வருகின்ற பொழுது சொல்கின்ற வரையில் பொறுத்திருந்திருக்கலாம் அல்லது கேட்டிருந்திருக்கலாம். சட்டமுன் வடிவிலே இல்லாவிட்டாலும் ரூல்ஸ்லே விளக்கமாக எல்லாம் போடப்படும் என்பதையும், எல்லோரும் நினைக்கின்ற வகையில் நல்ல முறையில் அமையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இன்னும் கூட, அரசாங்கத்தின் கொள்கையை ஒரு மசோதா வந்த பிறகும் கூட அதைச் சொல்வதற்குப் பின் வாங்குவதால்தான் இந்தக் குழப்பம் ஏற்படுகிறது. ஏனென்றால், மசோதாவைப் பார்க்கின்றபொழுது, பத்திரிகைகளைக் குற்றம் சாட்டுவதைவிட அரசு பொறுப்பேற்றுக் கொண்டு விளக்கம் சொல்லியிருக்க வேண்டுமென்பதை நான் இந்த அவைக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-20].

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்திலே கொண்டு வந்திருக்கின்ற திருத்தம் என்பது வேறு. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் எழுப்பியிருக்கிற பிரச்னை வேறு. அது ரூலிலே வரக்கூடிய ஒன்று.

1981 ஏப்ரல் 7] [திரு. சி. பொன்னையன்]

நேற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பது சட்டத்தினுடைய திருத்தங்கள். சட்டத்தினுடைய திருத்தங்களில் அது லைசன்ஸ் முறையா, ஏலம் முறையா என்பது வராது. அது ரூலில் வரும். விவாதத்தின்பொழுது, என்ன, என்ன ஆலோசனைகள் அவை சொல்கிறதோ, அவற்றை கருத்திலே கொண்டு பிறகு முடிவெடுக்கப்படும்.

ஆ. பேரவை நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு சட்டமன்ற நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு என்று சொல்லக்கூடிய வெளியீட்டிலே நேற்று நடந்த சம்பவங்களிலே முழுமையாக ஒரு கட்சியே விடப்பட்டிருக்கிறது. எங்கள் கட்சியின் சார்பிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் பேசியது ஒன்றுமே வராமல், அதெல்லாம் விடப்பட்டிருப்பதற்கு என்ன காரணம்? எப்படி விடுபட்டது? அவர் 15 நிமிடம் பேசியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விசாரிக்கிறேன். என்னுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் கொண்டுவந்தார்கள். அதைத் திருத்துவதற்காக ஏற்பாடுகளைச் செய்யும்படி என்னுடைய அலுவலகத்திற்கு ஆணை பிறப்பித்திருக்கிறேன்.

இ. உறுப்பினர்களின் தொலைபேசி ஆண்டுக் கட்டணத்தை அரசு ஏற்பது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்மீது சென்ற முறை பேசுகிற பொழுது, உறுப்பினர்கள் வைத்திருக்கக்கூடிய தொலைபேசிகளுடைய ஆண்டுக் கட்டணத்தை, வாடகையை அரசாங்கம் செலுத்தும் என்று அறிவித்தார்கள். இதுவரை, அந்தத் தொகையைச் செலுத்தாமல், உறுப்பினர்கள் உடனடியாகச் செலுத்த வேண்டுமென்று நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்களே, அதை அரசு செலுத்துமா, அல்லது உறுப்பினர்கள் செலுத்த வேண்டுமா என்பதை இப்பொழுது அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர், மாண்புமிகு நிதியமைச்சரிடத்திலே, நேரடியாகக் கடிதம் எழுதிக் கொடுக்கலாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : இது 6 மாதத்திற்கு மேலாகிறது. அதற்கு இன்னும் எஃபெக்ட் கொடுக்கவில்லையென்றால் என்ன அர்த்தம்?